# <u>சாதாரணகூட்டம்</u>

**2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் சாதாரணக் கூட்டம் நகர் மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.**

**தலைமை.திரு.ச.ஜெயமூர்த்தி, நகர் மன்ற தலைவர்,**

**கோட்டக்குப்பம் நகராட்சி**

**<u>பொருள் எண்: 01</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18 ஹாஜி மஹால் தெருவில் அமைந்துள்ள அரசு முஸ்லிம் தொடக்கப்பள்ளியில் வகுப்பறையில் மழை காலங்களில் மழை நீர் உள்ளே செல்வதால் மாணவர்களுக்கு மிகுந்த இடையூறாக இருப்பதால் வகுப்பறைக்குள் மழை நீர் உள்ளே செல்லாமல் படிக்கட்டுகள், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.7.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1904/2024/இ1)

**<u>பொருள் எண்: 02</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 தேரோடும் வீதியில் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி இருப்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் சிறுபாலத்துடன் கூடிய வடிகால் அமைக்க கோரி நகர்மன்ற உறுப்பினர் கடிதம் வழங்கியதற்கிணங்க அப்பகுதியில் வடிகால் அமைக்க தோராய செலவினம் ரூ.9.20/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1905/2024/இ1)

**<u>பொருள் எண்: 03</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.6450/2022/SBM1, நாள்.25.09.2024ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு Compost Bin கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி இயந்திரத்தினை பாதுகாப்பாக வைப்பதற்கு நகராட்சிக்கு வளம்மீட்பு பூங்காவில் மேல்கூரையுடன் கூடிய சிமெண்ட் கான்கிரிட் தளம் மற்றும் மின் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6.00/- இலட்சம் மட்டும்

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1906/2024/இ1)

<u>பொருள் எண்:04</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20 ஹாஜி உசேன் தெரு கடைசியில் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி இருப்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் வடிகால் அமைக்க கோரி நகர்மன்ற உறுப்பினர் கடிதம் வழங்கியதற்கிணங்க அப்பகுதியில் 'L' Angle உடன் கூடிய வடிகால் அமைக்க தோராய செலவினம் ரூ.5.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1907/2024/இ1)

<u>பொருள் எண்:05</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 சின்னகோட்டக்குப்பம் தோப்பு தெருவில் உள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பழுதடைந்து பக்க கான்கிரிட் சுவர்கள் விரிசல் ஏற்பட்டு உறுதி தன்மையற்று உள்ளதால் அவற்றினை பாரமரிப்பு பணிகள் மேற்கொண்டு பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் அதனை இடித்து அப்புறப்படுத்தி அதே இடத்தில் புதியதாக 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்க மதிப்பீட்டு தொகை ரூ.80.00/- இலட்சம் அரசு மானியம் பெற்று பணியினை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1908/2024/இ1)

**பொருள் எண்:06**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.08 கோட்டைமேடு மாரியம்மன் கோவில் தெரு சத்திப்பு முதல் இசிஆர் சாலை வரை குடிநீர் பைப்லைன் இல்லாதால் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்க இயலவில்லை, எனவே அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க ஏதுவாக நகர்மன்ற தலைவர் கடிதம் வழங்கியதற்கிணங்க குடிநீர் அவசர அவசியம் கருதி குடிநீர் பைப்லைக் அமைக்க தோராய செலவினம் ரூ.2.20/-இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1890/2024/இ1)

**பொருள் எண்:07**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகள் 100% ஒளிரவிடும் பொருட்டு தேவையான மின்விளக்குகள் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.4.90/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1909/2024/இ1)

**பொருள் எண்:08**

கோட்டக்குப்பம் நகராட்சியில் பொறியியல் பிரிவு, பொது பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான எரிபொருள் அருகில் உள்ள பி.குமாரசாமி & சன்ஸ், புதுச்சேரி என்ற நி'றுவனத்தின் மூலம் எரிபொருள் பெறப்பட்டு வந்த நிலையில் அவசர தேவைக்கு உடனடியாக எரிபொருள் வழங்காத நிலையில் தற்பொழுது வடகிழக்கு பருவமழை பேரிடர் காலத்தினை கருத்தில் கொண்டு கூடுதலாக மற்றொரு நிறுவனத்தின் மூலமும் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படுத்தப்படும் மின்னாக்கிகள், ஆணையாளர் அலுவலக ஈப்பு வாகனம், நகர் மன்ற தலைவர் ஈப்பு வாகனம், நகராட்சி பொறியாளர் ஈப்பு வாகனம், அலுவலக மின்னாக்கி, கழிவு நீர் தொட்டி மின்னாக்கிகள், கழிவு நீர் வாகனம், கொசு மருந்து இயந்திரம் மற்றும் மரம் அறுவை இயந்திரங்களுக்கு தேவையான எரிபொருள் M/s. ரஞ்சித் ஏஜென்சீஸ், பாரத் பெட்ரோலியம். புதுச்சேரி என்ற நிறுவனத்தின் மூலம் எரிபொருள் கொள்முதல் செய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1910/2024/இ1)

**<u>பொருள் எண்:09</u>**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 புதுத்தெரு மெயின் ரோடு, குறுக்கு தெரு 1 மற்றும் 3ல் உள்ள குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சாலைகளில் தேங்கி இருப்பதால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் வடிகால் அமைக்க கோரி நகர்மன்ற உறுப்பினர் கடிதம் வழங்கியதற்கிணங்க அப்பகுதியில் வடிகாலுடன் கூடிய 'L' Angle அமைக்க தோராய செலவினம் ரூ.9.50/-இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுலவக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1911/2024/இ1)

**<u>பொருள் எண்:10</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01, சர்வே எண். 81/2ல் (MRF) மறு சுழற்சி மையத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெற வரைபடம், மதிப்பீடு, மற்றும் Structural Desgin, Foundation Layout, Coloumn Centreline, Grade beam Layout, Truss Details தயார் செய்து வழங்குவதற்கு கலந்தாலோசகர் மூலம் பணியினை மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.38,000/- மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு :-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 477/2024/இ1)

**<u>பொருள் எண்:11</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (U) 2.Oன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Providing composting solution for wet waste of capacity 5-6 TPD pre composter with inbuilt shredder required, bio culture and 1000 pads/Masks per capacity Electrical Incinerator கொள்முதல் செய்ய ரூ.65.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து பணியினை மேற்கொள்ள மாநில அளவில்

தினசரி நாளிதழில் விளம்பம் வெளியிட தோராய செலவினம் ரூ.58,000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.476/2024/இ1)

**பொருள் எண்:12**

கோட்டக்குப்பம் நகராட்சி அலுவலகத்தில் கணினி பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் பிரிண்டர்களுக்கு போதிய அளவு டோனர் இருப்பு இல்லாததால் அலுவலக பணிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஆகையால் தேவையான அளவு டோனர்கள் தருவித்துக் கொள்ள தோராய செலவினம் ரூ.55,000/– மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | டோனர் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 88A | 20 |
| 2 | 12 A | 5 |
| 3 | MFP 2606 | 5 |
| 4 | HP 137 | 5 |
| 5 | Canon G2010 | 8 |

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதினை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1903/2024/இ1)

**பொருள் எண்:13**

கோட்டக்குப்பம் நகராட்சியில் ஆறாவது மாநில நிதிக்குழு திட்டத்தின் கீழ் புதிய வணிக வளாகம் கட்டிடம் கட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 34832/2023/எம்.எ1 நாள். 24.06.2024ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து புதிய வணிக வளாக கட்டிடம் கட்ட 06.08.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 06.09.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள்வரப்பெற்றவிபரம் | |
|---|---|---|---|---|
| | | | M/s. Meenu Industries PVT LTD | Muthusamy Construction |
| 1 | வார்டு எண். 01, சர்வே எண். 104/3ல் கிழக்கு கடற்கரை சாலை, பெரிய முதலியார் சாவடியில் வணிக வளாகம் கட்டுதல் (Phase I) | 148.00 | 0.01% Below the Estimate | 0.09% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதனை மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2127/2023/இ1)

**பொருள் எண்:14**

கோட்டக்குப்பம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (U) 2.0 ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு Providing composting solution for wet waste of capacity 5-6 TPD pre composter with inbuilt shredder required, bio culture and 1000 pads/Masks per capacity Electrical Incinerator கொள்முதல் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 6450/2022/SBM1 நாள்.25.09.2024ன் படி நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து Providing composting solution for wet waste of capacity 5-6 TPD pre composter with inbuilt shredder required, bio culture and 1000 pads/Masks per capacity Electrical Incinerator கொள்முதல் செய்ய 15.10.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 30.10.2024 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|---|
| | | | Saram Enviro Service Pvt Ltd | Greenrich Grow India Private Limited |
| 1 | Providing composting solution for wet waste of capacity 5-6 TPD pre composter with inbuilt shredder required, bio culture and 1000 pads/Masks per capacity Electrical Incinerator | 65.00 | 0.11% Below the Estimate | 4.00% Above the Estimate |

மேற்படி வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Saram Enviro Service Pvt Ltd என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதனை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.476/2024/இ1)

**<u>பொருள் எண்:15</u>**

தமிழ்நாடு அரசின் சார்பில் மக்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதல்கள், அனைத்து துறைகள் வாயிலாக நிறைவேற்றப்பட்ட பணிகள் மற்றும் அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்த தகவல்கள் மக்களுக்கு சென்றடையும் வகையில் கோட்டக்குப்பம் நகராட்சியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து இந்து தமிழ் திசை நாளிதழில் தொழில் வளர்ச்சி மலர் 2024 புத்தக வடிவில் வெளியிட அனுமதி வழங்க கோரி மாவட்ட ஆட்சித்தலைவர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்.87/செமதொ/2024, நாள்.01.10.2024 மற்றும் மேலாளர் இந்து தமிழ் திசை அவர்களின் கடித நாள்.04.10.2024ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது, மேற்படி விளம்பரம் வெளியிட செலவினம் ரூ.40,000/- மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.1246/2024/இ1)

**<u>பொருள் எண்:16</u>**

கோட்டக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01, சர்வே எண். 81/2ல் (MRF) மறு சுழற்சி மையத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெற வரைபடம், மதிப்பீடு, மற்றும் Structural Desigin, Foundation Layout, Coloum Centreline, Grade beam Layout, Truss Details தயார் செய்து கலந்தாலோசகர் (Consultant) மூலம் மேற்கொள்ள 16.10.2024 அன்று விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் 24.10.2024 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | விபரம் | வரப்பெற்ற விலைப்புகள் | | |
|---|---|---|---|---|
| | | Pavithra Associates, Chennai | Prorata.in Propotion, Chennai | Sketch to Roof Consultancy |
| 1 | Preparation Structural Drawing for the proposal construction of shed work | Rs.38,000 only. The GST 18% extra | Rs.40,000 only. The GST 18% extra | Rs.35,000 |

மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Sketch to Roof Consultancy, சென்னை என்ற நிறுவனத்தின் மூலம் பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.477/2024/இ1)

**பொருள் எண்:17**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட புல எண்.81/2ல் 0.30 ஹெக்டர் நிலத்தினை விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.ஆ4/8401/2017 நாள்.15.11.2023ன்படி கோட்டக்குப்பம் நகராட்சி ஆணையாளருக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டம் MRF (Micro Recovery Facility) செயல்படுத்திட முன் நுழைவு அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, மேற்படி இடத்தினை பாதுகாப்பு செய்யும் பொருட்டு சுற்று சுவர் அமைக்க தோராய செலவினம் ரூ.20.00/– இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1912/2024/இ1)

**பொருள் எண்:18**

கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள பொது கழிவறை மற்றும் சமுதாய கழிவறைகள் இந்நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டு கீழ்க்காணும் இடங்களில் அமைந்துள்ள கழிவறைகள் பழுது ஏற்பட்டுள்ளதாக கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இக்கழிவறைகளை புனரமைப்பு பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.15.00/– இலட்சம் மட்டும் இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | கழிவறை அமைந்துள்ள இடம் | பழுது விபரம் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.06, எம்.ஜி.ஆர் நகர் சமுதாய கழிவறை | பக்க சுவர் மற்றும் வாஷ்பேஷன் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 2 | வார்டு எண்.07, இந்திரா நகர் சமுதாய கழிவறை | கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்தல், கதவுகள், வாஷ்பேஷன் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 3 | வார்டு எண்.07, தந்திராயன்குப்பம் சமுதாய கழிவறை | கதவுகள் சரி செய்தல் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 4 | வார்டு எண்.07, தந்திராயன்குப்பம் பொது கழிவறை | கேட் சரி செய்தல், குடிநீர் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 5 | வார்டு எண்.23, ஈஸ்வரன் கோயில் சமுதாய கழிவறை | கதவுகள் சரி செய்தல் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 6 | வார்டு எண்.11, கோட்டக்குப்பம் காலனி சமுதாய கழிவறை (பெண்கள்) | மேல்தளம், வாஷ்பேஷன், பைப்லைன் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 7 | வார்டு எண்.10, கோட்டக்குப்பம் காலனி சமுதாய கழிவறை (ஆண்கள்) | வாஷ்பேஷன் மற்றும் மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 8 | வார்டு எண்.09, நடுக்குப்பம் சமுதாய கழிவறை | பக்க சுவர் மற்றும் பைப்லைன் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் |
| 9 | வார்டு எண்.11 கோட்டக்குப்பம் சுடுகாட்டு பாதை | வாஷ்பேஷன் சரி செய்தல் பணி மேற்கொள்ளுதல் |

<u>அலுவலககுறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1914/2024/இ1)

<u>பொருள் எண்:19</u>

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25, சின்ன கோட்டக்குப்பம் வேதா பாடசாலையில் அமைந்துள்ள குழந்தைகள் அங்கன்வாடி மையம் பழுதடைந்து இருப்பதால் அதனை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6.00/- இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுலவக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1919/2024/இ1)

**பொருள் எண்: 20**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மற்றும் 22, காந்தி வீதியில் அமைந்துள்ள மழைநீர் வாய்க்கால் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு வடிகாலில் நீர் தேங்கி துருநாற்றம் விசுவதாக பொது மக்களிடமிருந்து புகார் வருவதால் வடிகாலினை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6.50/– இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1920/2024/இ1)

**பொருள் எண்: 21**

மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் விழுப்புரம் மாவட்டத்தில் 06.11.2024 அன்று ஆய்வு மேற்கொள்ள உள்ளதனை நாளிதழில் விளம்பரம் வெளியிட தோராய செலவினம் ரூ.1.20/– லட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுலவக குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1921/2024/இ1)

**பொருள் எண்: 22**

கோட்டக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.18ல் உள்ள பெரிய தெரு கடை எண்.1க்கு மாத வாடகை ரூ.2100/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் 21.08.2024, 05.09.2024, 12.09.2024 (ம) 26.09.2024 ஆகிய நான்கு தேதிகளில் நடைபெற்றது. மேலும் 21.08.2024, 12.09.2024 (ம) 26.09.2024 ஆகிய மூன்று தேதிக்கு பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளிகள் கோர எவரும் முன் வரவில்லை 05.09.2024 அன்று மட்டும் மாத வாடகை நிர்ணயம் செய்த தொகையைவிட குறைவாக ஏலத்தொகையினை குத்தகைதாரரால் கோரப்பட்டது. அதனால் மாத வாடகை நிர்ணயம் செய்யக்கோரி குறைவாக ஏலத்தொகை கோரப்பட்ட ஏலத்தினை முடிவு செய்ய இயலவில்லை. எனவே இதனை தொடர்ந்து கீழ்காணும் அரசாணையின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

அரசாணை (2ப) எண்.66. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2024ல் வரிசை எண்.3 (VII)ல் தொடர்ந்து பலமுறை ஏலம் நடத்தியும் (குறைந்த 4 முறைக்கு மேல் மின்னனு – ஏலம் (E–Action) நடத்தப்பட்டிருக்க வேண்டும்) நிர்வாகத்தால் நிர்ணயம் செய்த தொகைக்கு ஏலம் கோரப்பட்டாத குத்தகை/உரிம இனங்களில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டுள்ள ஏலம் கோரப்பட்ட

தொகையிலிருந்து 10% தொகை குறைத்து மறு ஏலம் கோரலாம். அதற்கு மேல் குறைக்கப்பட வேண்டிய சூழல் உள்ள நிலையில் உரிய காரணங்களை தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து வார்டு 18ல் உள்ள பெரியதெருகடை எண்.1யை 4 முறை பொது ஏலம் (ம) ஒப்பந்தப்புள்ளி கோரியதில் எவரும் ஏலம் கோர முன்வராத சூழ்நிலையில் அரசாணையின்படி மாத வாடகை தொகை ரூ.2100/–யை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை 10% குறைத்து ரூ.1890/–க்கு மறு ஏலம் (ம) மறு ஒப்பந்தப்புள்ளி கோர நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு 05.11.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டதில் அதில் திரு.உமர் பாரூக் த/பெ ஜாபர் அலி, என்பவர் ஏலம் கோரிய தொகைக்கு ரூ.1890/– மாத வாடகையை செலுத்த சம்மதம் தெரிவித்துள்ளார். அதன்பேரில் மாத வாடகையாக அடிப்படையில் பெரியதெரு கடை எண்.1, குத்தகை உரிமம் தொகை ரூ.1890/– மாத வாடகை அனுபவித்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 689/2022/அ1)

<u>பொருள் எண்: 23</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து அரங்கண்டநல்லூர் பேரூராட்சிக்கு பணிமாறுதலில் சென்று வயது முதிர்வின் காரணமாக 31.05.2023ல் ஓய்வு பெற்ற திரு.த.தணிகாசலம் என்பவர் சென்னை உயர் நீதி மன்றம் வழக்கு எண்.W.P.No.1794/2024–ல் ஓய்வுப்பெறும் போது காலம் கடந்த நிலுவைத் தொகையை அவரது விருப்ப கடிதத்துடன் சேம நல சந்தா தொகையில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை திரும்ப வழங்ககோரி நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கின் 07.08.2024ம் தேதிய நீதிமன்ற தீர்ப்பாணையின்படி திரு.த.தணிகாசலம் என்பவருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்வது குறித்து மேல்முறையீட்டு வழக்கு தொடர்வது அல்லது தீர்ப்பின்படி செயல்படுவது தொடர்பாக உரிய சட்ட கருத்துரு திரு.K.ஆறுமுகம், அரசு வழக்கறிஞர் வானூர் அவர்களிடம் பெறப்பட்டது அதற்கான தொகை ரூ.10,000/– வழங்க கோரியுள்ளார்.

மேலும் திரு.த.தணிகாசலம் ஓய்வு பெற்ற வரித்தண்டலருக்கு சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பாணையின்படி சேம நலநிதி தொகை பிடித்தம் செய்யப்பட்ட

தொகை ரூ.579871/—யை தனியருக்கு வழுங்கப்பட்டது. அதன் விபரத்தினை சென்னை உயர் நீதிமன்றத்தில் Compliance Report தாக்கல் செய்ய ஒருபக்க அறிக்கை (ஆங்கிலத்தில் தயார் செய்தமைக்கு ரூ.5000/— அரசு வழக்கறிஞர் திரு.K.ஆறுமுகம் என்பவர் வழங்க கோரியுள்ளார்.

எனவே கீழ்காணும் விவரப்படி திரு.K.ஆறுமுகம் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு கீழ்கண்டவாறு தொகை வழங்க வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | சட்ட கருத்துரு கட்டணம் | ரூ.10,000/— |
| 2. | ஆங்கிலத்தில் ஒருபக்க அறிக்கை கட்டணம் | ரூ. 5000/— |
| | **ஆக மொத்தம்** | **ரூ.15,000/—** |

மேற்காணும் விபரப்படி அரசு வழக்கறிஞருக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.15,000/— வழங்க மன்றம் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசரஅவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்ற அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 448/2024/அ1)

**பொருள் எண்: 24**

கோட்டக்குப்பம் நகராட்சி 2025ம் ஆண்டிற்கு அலுவலக உபயோகத்திற்கு தேவையான எழுது பொருட்கள்மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை வாங்கிட தமிழ்நாடு மல்டி பர்பஸ் இன்ட்கோ சர்வீஸ் நிறுவனம்,திருச்சியிலிருந்து வாங்கி கொள்ளவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.5.00 லட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின்ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோ.எண்:294/2022/டி1)

**பொருள் எண்: 25**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கோட்டக்குப்பம் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் அரசாணை (நிலை) எண்.183 நாள் 31.12.2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அறிவிப்புகள், சென்னை பெருநகர பகுதி கழிவு மேலாண்மை (ஒழுங்குமுறை) விதிகள் — 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் விதிமுறை படியும், அனைத்து கழிவுநீர் வாகனங்கள் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்து உரிமம் பெறப்பட்டுள்ளது. மேலும் அதனை செயல்படுத்தும் வகையில் 14420 கட்டணமில்லா தொலைபேசி எண் கழிவுநீர் மேலாண்மை குழு (மாவட்ட மற்றும்

உள்ளாட்சி அமைப்புகள் அளவில்) அமைக்கப்பட்டு 100 சதவிகிதம் திறந்த வெளியில் மலம் கழித்தல் (Open Defecation Free++) , சிறுநீர்கழித்தல் இல்லாத நகராட்சியாக மற்றும் பாதுகாப்பான முறையில் கசடு கழிவுகள் மேலாண்மை செயல்பட்டு வருவது குறித்து குறித்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், அதற்கான பொதுமக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை குறித்து பத்திரிகை செய்தியாக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் வெளியிட மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம் மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு மூலம் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.40,000/– மட்டும் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.130/2023/எச்1)

<u>பொருள் எண்: 26</u>

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் (MoHUA) கீழ் தூய்மை இந்தியா திட்டம் (நகரம்) 2.0 திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்பாடுகள் மூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு குப்பை இல்லா நகரம் (Garbage Free City) தொடர்பான தரச்சான்று (Garbage Free City – 1 Star/ 3 Star /5 Star /7 Star/) வழங்கப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக கோட்டக்குப்பம் நகராட்சியில் சேகரமாகும் திட மற்றும் திரவக்கழிவுகளை உரிய திட மற்றும் திரவக்கழிவுகள் மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து, சேகரிக்கப்பட்டு மற்றும் கழிவு செயலாக்க மையங்களின் மூலம் உரிய அறிவியல் ரீதியான முறையில் செயலாக்கம் செய்யப்படுகிறது. எனவே கோட்டக்குப்பம் நகராட்சியினை குப்பை இல்லா நகரம் (Garbage Free City) தொடர்பான தரச்சான்று மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) குறித்து நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், அதற்கான பொதுமக்களிடம் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை குறித்து பத்திரிகை செய்தியாக ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழில் வெளியிட மாவட்ட மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம் மூலம் மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.40,000/– மட்டும் இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.379/2023/எச்1)

**பொருள் எண்: 27**

வடகிழக்கு பருவமழை காரணமாக மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையின்படி மரம் அறுக்கும் இயந்திரங்கள் 10 எண்ணிக்கையில் உள்ளதனை 6 இயந்திரங்கள் முழுவதும் பயன்படுத்திட இயலாது பழுது ஏற்பட்டுள்ளதனை சீர் செய்து வழங்க விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பொருள் விபரம் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|
| | | பொருமாள்ராஜா எலக்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர் | சிவா டீசல் இன்ஜினியரிங் சர்வீஸ் |
| 1 | Cylinder Set | 1650 | 1700 |
| 2 | Spare Plug | 140 | 150 |
| 3 | Connecting Rod | 1150 | 1200 |
| 4 | Carbonator | 1200 | 1250 |
| 5 | 18" Cahin | 900 | 1050 |
| 6 | 18" Bar | 1100 | 1150 |
| 7 | Packing | 350 | 400 |
| 8 | Labour Charge | 700 | 800 |

மேற்படி வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.பொருமாள்ராஜா எலக்ரிகல்ஸ் ஒப்பந்ததாரர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1424/2024/எச்1)

**பொருள் எண்: 28**

திடக்கழிவு மேலாண்மை முதல் நிலை சேகரிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் இலகுரக வாகனங்கள் (LVC) மூலம் வருவாய் வசூல், குடிநீர் வரிவசூல் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 6 வாகனங்களுக்கு மைக்செட், ஆட்பிளிபயர், பென்டிரைவ், குழாய் மற்றும் இதர பொருட்கள் வழங்க விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பொருள் விபரம் | விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் | |
|---|---|---|---|
| | | சிவா எண்டர்பிரைசஸ் | ஹாசினி டிரேடர்ஸ் |
| 1 | Car Musif System Set | 2250 | 2300 |
| 2 | Speaker Cone Type | 1650 | 1750 |
| 3 | 1.00 Sqmm Multi Stand Wire | 25 | 26 |
| 4 | Insulation Tape | 20 | 20 |
| 5 | Labour Charges | 750 | 775 |

மேற்படி வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s.சிவா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.1704/2024/எச்1)

<u>பொருள் எண்: 29</u>

கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் உள்ள 27 வார்டுகளிலும் டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா போன்ற நோய்களை பரப்பும் கொசு புழுக்களை அழிக்கும் மருந்து மற்றும் முதிர் கொசுக்களை தடுக்கும் மருந்துகள் கீழ்கண்ட அளவுகளில் வாங்கி வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2,10,000/- இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | தேவையான பொருட்களின் விபரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| 1 | அபேட் (டெமிபாஸ்) | 40 லிட்டர் |
| 2 | பைரித்திரம் 2 % | 100 லிட்டர் |
| 3 | மாலத்தியான் | 40 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு:-</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.709/2024/எச்1)

**பொருள் எண்: 30**

கோட்டக்குப்பம் நகராட்சியில் 27 வார்டுகளில் 8981 வீடுகள் மற்றும் 783 வணிக நிறுவனங்கள் உள்ள நிலையில் நகரில் தற்பொழுது 30 DBC கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மட்டும் பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நபர் ஒன்றுக்கு 300 வீடுகளில் சுழற்சி முறையில் ( 6 Day Block) பணிகள் மேற்கொள்ள விழுப்புரம் துணை இயக்குநர், சுகாதார அலுவலர் அவர்கள் கடிதம் ந.க.எண்.0276/2021/அ4, நாள்.18.04.2023ன் அறிவுரைகளின்படியும், தற்பொழுது நகரில் தொடர்ந்து டெங்கு காய்ச்சல் பாதிப்புகள் தென்படுவதாலும், மேற்படி பணிகளை மேற்கொள்ள 30 பணியாளர்களை பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் நகரில் டெங்கு தொற்றுகள் தொடர்ந்து தென்பட்டு வருதால் நகர மக்களின் நலன் கருதியும், பருவமழை காலத்தினை கருத்தில் கொண்டும், ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு உள்ளூர் உள்ள மகளில் சுய உதவிக்குழுவின் மூலம் 01.10.2024 முதல் கூடுதலாக 60 பணிநாட்கள் பணிபுரிய நபர் ஒன்றுக்கு ரூ.400/- நாள் ஒன்றுக்கு வீதம் வழங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.7.20 இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.709/2024/எச்1)

**பொருள் எண்: 31**

விழுப்புரம் மாவட்டம் துணை இயக்குநர், சுகாதார பணிகள் அவர்களின் கடிதத்தின்படி கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் இதர காய்ச்சல்கள் தென்படுவதால் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளர் அவர்களின் குறிப்பின்படி கோட்டக்குப்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு பணி மேற்கொள்ளவும், அதனை கட்டுப்படுத்தும் விதமாக கொசு புழுக்கள் ஒழிப்பு பணிகள், கொசு மருந்து தெளித்தல் மற்றும் இதர காய்ச்சல் தடுப்பு பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் 30 நபர்களை கொண்டு பணிகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளதன்படி விலைப்புள்ளி பெற்று நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமாக 30 DBC மஸ்தூர் பணியாளர்களை உள்ளூர் சுய உதவிக்குழுவின் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.400/- வீதம் 01.08.2024 முதல் 60 பணிநாட்களுக்கு பணி அமர்த்திடவும், இதற்காக தோராய செலவினம் ரூ.7.20

இலட்சம் மட்டும் இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணியின் அவசியம் கருதி நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.337/2022/எச்1)

**பொருள் எண்: 32**

இந்நகராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்களில் உள்ள நச்சுத்தொட்டிகளில் (Septic Tank) கழிவுகளை சுத்தம் செய்ய இந்நகராட்சி மூலம் புதியதாக வழங்கப்பட்டுள்ள கழிவு உறிஞ்சும் லாரி (Sullage Tanker Lorry) TN 16 K 0477-ஐ பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், கழிவு நீர் உறிஞ்சும் லாரியை கொண்டு ஒவ்வொரு வீடு மற்றும் வர்த்தக நிறுவனங்களில் உள்ள நச்சுத்தொட்டியில் உள்ள கழிவு நீரை உறிஞ்சி அகற்ற ஒவ்வொரு நடைக்கும் கட்டணமாக ரூ.2000/- நிர்ணயம் செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.130/2023/எச்1)